தில்லிக்கு ராஜாவானாலும்...

தில்லி அரசு தொடுத்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, நிலம், காவல், பொது ஒழுங்கு ஆகியவை தவிர அனைத்து விவகாரங்களிலும் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட தில்லி அரசுக்குத்தான் முழு அதிகாரம் இருப்ப தாகத் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிர்வினையாக, உயர் அதிகாரிகளின் பணி நியமனம், பணியிட மாற்றம் குறித்து முடிவு செய்வதற்கு 'தேசிய தலைநகர் சிவில் சர்வீசஸ் ஆணையம்' அமைத்து மத்திய அரசு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறது.

அரவிந்த் கேஜரிவால் தலைமையிலான தில்லி அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே நடக்கும் மோதல், மீண்டும் உச்சநீதி மன்றத்துக்குத் திரும்பி இருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யக்கோரி மத்திய அரசு மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்திருக்கிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு தங்களுக்கு அந்த அதிகாரத்தைத் தந்திருப்பதை நினைத்து 24 மணிநேரம்கூட சந்தோஷப்பட முடி யாமல், அவசரச் சட்டம் அந்த அதிகாரத்தை மீண்டும் பறித்துக் கொண்டுவிட்டது. முதல்வர், அமைச்சர்கள் கட்டுப்பாட்டில் அரசு அதிகாரிகள் இல்லை என்பதுதான் ஆம் ஆத்மியின் குற்றச்சாட்டு.

உயர் அதிகாரிகளின் பணி நியமனம், பணியிட மாற்றம் குறித்து முடிவு செய்வதற்கு தில்லி முதல்வர், தலைமைச் செயலாளர், முதன்மை உள்துறைச் செயலாளர் அடங்கிய 'தேசிய தலைநகர் சிவில் சர்வீசஸ் ஆணையம்' அமைத்து வெளியிடப்பட்டிருக்கும் அவசரச் சட்டம், பெயருக்கு மட்டும்தான் முதல்வரை முன்னிலைப் படுத்துகிறது. பெரும்பான்மை அடிப்படையில் தேர்வு என்பது மட்டுமல்ல, துணைநிலை ஆளுநரின் இறுதி முடிவையும் அது உறுதிப்படுத்துகிறது.

EVA STALIN IAS ACADEMY

உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் பல கருத்துகளைத் தெரிவித் திருக்கிறது. கூட்டாட்சித் தத்துவம் குறித்தும், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசின் அதிகாரம் முதன்மை பெறும் என்றும் தெரிவிக்கிறது. அதே நேரத்தில், தில்லி அரசின் அதிகாரங்கள், நாடாளுமன்றச் சட்டங்களுக்கு உட்பட்டது என்றும் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தெரிவித்திருக்கிறது. அதன்படி பார்த்தால், புதிய நிர்வாகக் குழு அமைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு என்றுதான் கருத முடிகிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளும் விதத்தில், நாடாளுமன் றம் (அதாவது அரசு) செயல்பட முடியுமா என்பது ஒரு கேள்வி. சட்டம் இயற்றும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இல்லை என்பதும், நாடாளுமன்றத்தின் அந்த உரிமையில் உச்சநீதிமன்றம் தலையிட முடியாது என்பதும் இன்னொரு பார்வை.

தில்லி அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் அதிகார மோதல், அரசியல் நிர்ணய சபையிலேயே விவாதிக்கப்பட் டது. தில்லியை அதிகாரமில்லாத பகுதியாக்கக் கூடாது என்று உறுப்பினர் தேஷ்பந்து குப்தா வாதிட்டார். ஆனால், தில்லி மாநில மாக இருந்தாலும் அது நாடாளுமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும் என்பதில் சட்ட அமைச்சர் பாபாசாகேப் அம்பேத்கர் பிடிவாதமாக இருந்தார். 1956-இல் அமைந்த மாநில சீரமைப்புக் குழுவும் அந்தக் கருத்தை அங்கீகரித்தது.

1966-இல் தில்லி மெட்ரோபாலிடன் கவுன்சில் உருவாக்கப் பட்டது. அதற்கு நடந்த முதல் தேர்தலில், ஜனசங்கம் (பாஜக) வெற்றி பெற்று எல்.கே. அத்வானி அதன் தலைவரானார். 1993-இல் தில்லி ஒன்றிய பிரதேசத்துக்கு சட்டப்பேரவை அமைந்தது. முதல் தேர்தலில் பாஜக வெற்றி பெற்று மதன்லால் குரானா முதல்வரானார்.

EVA STALIN IAS ACADEMY

அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று, ஷீலா தீட்சித் முதல்வரானது மட்டுமல்ல, தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்று 15 ஆண்டுகள் பதவியில் தொடர்ந்தார். 2013 தேர்தலில் காங்கிரஸையும், பாஜகவையும் பின்னுக்குத் தள்ளி அரவிந்த் கேஜரிவாலின் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைக் கைப்பற்றி இன்று வரை தொடர்கிறது.

காங்கிரஸ், ஐக்கிய முன்னணி ஆட்சிகளில் பாஜகவின் மதன் லால் குரானா, சாஹேப் சிங் வர்மா, சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோரும்; வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் காங்கிரஸின் ஷீலா தீட்சித்தும் தில்லி முதல்வர்களாக இருந்தனர்.

2003–இல் உள்துறை அமைச்சராக இருந்த எல்.கே. அத்வானி தான் தில்லிக்கு மீண்டும் முழுமையான மாநில அந்தஸ்து வழங்கும் மசோதாவை அறிமுகப்படுத்தினார். அதற்குப் பிறகும், ஷீலா தீட்சித் முதல்வராக இருந்தது வரை எந்தவிதப் பிரச்னையும் இருக்கவில்லை. 2013–இல் அரவிந்த் கேஜரிவால் முதல்வரானபோதுதான் பிரச்னை தொடங்கியது.

உலகளாவிய நிலையில் முக்கியமான பல தேசிய தலைநகரங்கள், மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. அமெரிக்காவில் வாஷிங்டன், ஜெர்மனியில் பெர்லின், பிரான்ஸில் பாரீஸ், ஆஸ்திரேலியாவில் கேன்பெரா, கனடாவில் ஒட்டாவா ஆகியவற்றில் அதிகாரங்கள் மத்திய அரசுகளின் வசம்தான் இருக்கின்றன. குடியரசுத் தலைவர், பிரதமர், உச்சநீதிமன்ற நீதிபதிகள், வெளிநாட்டுத் தூதரகங்கள், பாதுகாப்புத் தொடர்பான அலுவலகங்கள், நாடாளுமன்றம் ஆகியவை இருக்கும் தேசியத் தலைநகரின் நிர்வாகக் கட்டுப்பாடு, மத்திய உள்துறை வசம் இருக்க வேண்டும் என்பது அரசியல் சாசன சபையில் அம்பேத்கர் முன்வைத்த வாதம்.

அரவிந்த் கேஜரிவால் அரசின் மீது பல ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. முதல்வர் அரவிந்த் கேஜரிவால் ரூ. 52 கோடி செலவில் தனது 'சீஷ் மஹால்' இல்லத்தைப் புதுப்பித்தது குறித்த சர்ச்சை எழுந்திருக்கிறது. அவை குறித்த கோப்புகளையும், தடயங்களையும் கேஜரிவால் அரசு அழித்துவிடக் கூடும் என்பது மத்திய பாஜக அரசின் அச்சம். அதுதான் இப்போதைய மோதலுக்குக் காரணமாக இருக்குமோ என்கிற ஐயப்பாடு எழுகிறது.

EVA STALIN IAS ACADEMY